பாதிக்கப்பட்டோருக்கு

## விசேஷ நிவாரண பத்திரங்கள் விநியோகம்

காங்கேசன்துறை மே 12

பலாலி விமான நிலைய விஸ்தரிப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுக்கும் வகையில் விசேஷ நிவாரணப்பத்திரங்களை பிரசைகள் குழுக்களின் ஒன்றியம் தயாரித்து வழங்கி வருகிறது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் வலி–வடக்கு பிரசைகள் குழுக்களின் ஒன்றியம் சத்தியக்கடதாசியுடன் கூடிய விசேஷ பத்திரங்களை தயார் செய்துள்ளது.

அவ்வப்பகுதி பிரசைகள் குழுக்கள் மூலம் இவை விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்கள் மேற்படி பத்திரங்களைப் பெற்று பூர்த்தி செய்து வீமன்காமம் மகா வித்தியாலயத்தில் இயங்கும் காரியாலயத்தில் ஒப்படைக்க வேண்டும் என ஒன்றியத்தின் இணைச் செயலாளர் திரு. எஸ். சண்முகலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பலாலி பாதுகாப்பு வலயம்

# பாடசாலைகள் இயங்க முடியாத நிலை

பலாலி, மே 12

பலாலி இராணுவ முகாமையும், விமான நிலையத்தையும் சூழவுள்ள 1000 மீற்றர் தூரப் பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ள பாடசாலைகளும், அவற்றுக்கு அண்மையிலுள்ள பாடசாலைகளும் இயங்க முடியாமல் உள்ளன.

இப்பகுதிகளில் இருந்து மக்கள் இடம் பெயர்ந்துள்ளதும், அடிக்கடி ஹெலிகொப்டர் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதுமே இதற்குக் காரணமாகும்.

இப்பகுதிப் பாடசாலைகளில் கல்வி கற்க முடியாத தற்காலிகமாக இடம் பெயர்ந்துள்ள மாணவர்களுக்கு நிரந்தரமான பாடசாலை விலகல் பத்திரங்கள் வழங்காது தற்காலிக விலகல் அனுமதியை மட்டும் வழங்குமாறு யாழ் கல்விப் பணிப்பாளர் காங்கேசன்துறை வட்டார அதிபர்களிடம் தெரிவித்தார்.

இவ்வறிவித்தலை சுற்று நிருபம் மூலம் ஏனைய பகுதி அதிபர்களுக்கும் தாம் அறிவிக்கவுள்ளதாகவும் அதன்மூலம் தமது பாடசாலைகளில் தற்காலிக அனுமதியை இம் மாணவர்களுக்கு வழங்க அதிபர்களுக்கு அதிகாரம் அளிக்கவுள்ளதாகவும் மேலும் அவர் தெரிவித்தார்.

### நிவாரணம்

கொழும்பு, மே.12

வெள்ளத்தினால் வீடுகளை இழந்த களுத்துறை, மாத்தறைப் பகுதி மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக சுமார் ஐந்து கோடி ரூபா நிதி தேசிய வீடு அபிவிருத்தி அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டது.

உலக கபிச்சமிகத் தலைவர் ஷேக் சாம்சடீன் அப்துல்லா அல்பாசி இந்தத் தொகையை நிவாரணத்துக்கென வழங்கினார்.

சுமார் 10,000 ரூபா பெறுமதியுள்ள 500 வீடுகள் இதனால் நிர்மாணிக்கப்படும்.

## விளையாட்டு மைதான காணியை நிலமற்றவருக்கு வழங்குக

### மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 12

விளையாட்டுமைதானம் அமைக்க அரசிடம் கோரப்பட்ட காணியை காணியற்ற மக்களுக்கு வழங்கும்படி மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் யாழ்ப்பாணம் அரச அதிபரைக் கேட்டுள்ளது.

மல்லாகம் — கட்டுவன் வீதியில் உள்ள மயானத்துக்கு அருகில் 69 பரப்புக் காணியை விளையாட்டு மைதானம் அமைக்க அரசிடம் கிராம அபிவிருத்திச் சங்கம் கோரியிருந்தது.

தற்பொழுது சங்கம் வேறொரு இடத்தில் விளையாட்டு மைதானம் அமைக்க காணியை வாங்கியுள்ளது.

இதனை அரச அதிபரிடம் சுட்டிக்காட்டிய சங்கம், மல்லாகத்தில் உள்ள காணியற்ற 21 குடும்பங்களுக்கு அந்த 69 பரப்புக்காணியைப் பகிர்ந்தளிக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளது.

இதுபற்றி நடவடிக்கை எடுப்பதாக அரச அதிபர் சங்கத்துக்கு உறுதியளித்து இருக்கிறார்.

### கட்டணம் அதிகரிப்பு

சாவகச்சேரி, மே 12

சாவகச்சேரி – யாழ்ப்பாணம் மினி பஸ் கட்டணம் மேலும் 50 சதத்தால் அதிகரித்துள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு, விலை அதிகரிப்பு ஆகியவை காரணமாக நாலு ரூபா அறவிட்டவர்கள் இப்போது ஐம்பது சதத்தைக் கூடுதலாக அறவிடுகிறார்கள்.

கச்சேரி கோப்பாய் சுற்றிச் செல்வதாகக் கூறி இவர் 5 ரூபாவும் அறவிடுகிறார்கள்.

### நகரில் தீ

யாழ்ப்பாணம், மே 12

ரயில்வே அதிகாரிகளின் விடுதிகளில் ஒன்று சனியிரவு திடீரென தீப்பிடித்து எரிந்தது.

மின்சார ஒழுக்கே தீப்பிடித்ததற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

## தெய்விகப் படங்களுக்கு இன்றும் வரவேற்பு உண்டு

இன்றைய தமிழ்த் திரையுலகில் சமூகப் படங்களுக்கு எந்த அளவுக்கு மக்கள் மத்தியில் வரவேற்பு இருக்கின்றதோ— அந்த அளவுக்கு பக்திப் படங்களுக்கும் வரவேற்பு இருக்கின்றது.

அண்மையில் வெளியாகி வெற்றி கண்ட மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி, சமயபுரத்தாளே சாட்சி போன்ற படங்களே இதற்கு உதாரணம்.

இந்த வரிசையில் இடம் பெறும் பிரிதி இந்தர் கம்பைன்ஸின் 'சர்வம் சக்தி மயம்' எனும் தெய்விகத் திரைப்படத்தை உருவாக்கியவர் டைரக்டர் பி. ஆர் சோமசுந்தர்.

இவர் ஏற்கனவே சமூகப் படங்களை டைரக்ட் செய்தவர் தான்.

ஆனால், திரையுலகில் அடியெடுத்து வைத்த ஆரம்பகாலத்திலேயே அரும்பிய தெய்விக உணர்வு தான் அவரை தெய்விகப் படங்களை டைரக்ட் செய்யத் தூண்டி இருக்கிறது.

கடவுள் சம்பந்தப்பட்ட படங்கள், காலப் புயலால் கலைந்து விடாது அவை எந்த காலமும் கல்வெட்டுப் போல் நிலைத்து நிற்கும் என்கிறார் டைரக்டர் சோமசுந்தர்.

அவர் இது பற்றி குறிப்பிடுகையில்,

அண்மைக் காலத்தில் வெளியான தெய்விகப் படங்களின் வெற்றி தான் என்னை இந்தகைய படங்களை உருவாக்கத் தூண்டியது.

அது மட்டுமல்ல; நான் ஏற்கனவே சுவாமி படத்தை டைரக்ட் செய்தவன். எங்கள் குலதெய்வம் என்ற அந்தப் படத்தில் முத்துராமன் கே. ஆர். விஜயா, ஜெயசித்ரா ஆகியோர் நடித்திருந்தார்கள். படம் நூறு நாட்களைத் தாண்டி ஓடியது.

அந்த நம்பிக்கையுடன் இப்பொழுதும் இரண்டு பக்திப் படங்களை டைரக்ட் செய்கிறேன்'' என்றார்.

தினசரி சினிமா

## பெண்ணுக்கு சாராய அபிஷேகம்

கல்முனை, மே12

மூன்று கலன் வடிசாராயம் எடுத்துச் சென்ற இளம் பெண் ஒருவருக்கு சிப்பாய்கள் புதிய ரக தண்டனை ஒன்றை வழங்கினர். கோமாரி இராணுவ முகாமடியில் அண்மையில் நடைபெற்ற இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது.

தம்பிலுவில் கிராமத்தைச் சேர்ந்த 39 வயதான இவ்விளம் பெண் 3 கலன் வடிசாராயம் எடுத்துக்கொண்டு பொத்துவிலுக்கு பஸ்ஸில் சென்று கொண்டிருந்தார். வழியில் சிப்பாய்களின் சோதனையில் இவர் அகப்பட்டுக்கொண்டார். இவரை சில நிமிட நேரம் விசாரணை செய்த சிப்பாய்கள் தரையில் ஊற்றி விடும் படி கூறினர்.

பெண் அதற்கு இணங்க மறுக்கவே, 3 கலன் சாராயத்தையும் அவரது தலையிலேயே ஊற்றுமாறு உத்தரவிட்டனர்.

அதன்படி பெண் தலையில் சாராயம் ஊற்றப்பட்டது.

விற்பனைக்கு

வீட்டுத் தளபாடங்கள், மின்சார உபகரணங்கள் இல. 1 (148), 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் இல்லத்தில் விற்பனைக்குண்டு. 12ஆம், 13ஆம் திகதிகளில் தொடர்புகொள்ளவும்;- நிர்வாக காரியதரிசி, வட இலங்கை மருத்துவக் கல்லூரி, 164, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

## ஆர்ப்பாட்டத்தில் காயமடைந்தவருக்கு வெளிநாட்டில் சிகிச்சை

கல்முனை, மே 12

மட்டக்களப்பில் கடந்த ஆண்டு இடம் பெற்ற இல்மனைற் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகாயமடைந்து நடக்க முடியாத நிலையில் உள்ள ஜனாப் முனாலெப்பை முகைட் அலியை (வயது 18) வெளிநாட்டுக்கு அழைத்துச் சென்று வைத்திய சிகிச்சை அளிக்க இலங்கை டலஸ்தீன ஒருமைப்பாட்டு இயக்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இயக்கத் தலைவர் திரு. மகிந்த ராஜபக்ஷ இது சம்பந்தமான ஏற்பாடுகளைக் கவனிக்க ஒலுவில் கிராமத்துக்கு மாத இறுதியில் வரவிருப்பதாக இயக்க அம்பாறை மாவட்டச் செயலாளர் ஜனாப். எம். எம். அபூபக்கர் தெரிவித்தார்

## 3 குண்டு வெடிப்பு சம்பவங்களும் ஒரே மாதிரியானவையா?

கொழும்பு, மே 12

கடந்த வாரம் கொழும்பு மத்திய தந்திக் கந்தோரில் ஏற்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவமும், எயர் லங்கா விமானத் தகர்ப்பும், வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்தில் சிதறிய குண்டும் ஒரேரகத்தைச் சேர்ந்தவையா என்பதை மேலதிக அரசாங்க பகுப்பு ஆய்வாளர் திரு ஏ.ஆர். எல். விஜேயசேகரா தலைமையிலான குழு ஒன்று ஆராய்ந்து வருகின்றது.

இந்த குண்டுகளுடன் குறித்த நேரத்தில் வெடிக்கத்தக்க கணிக்கூடும் பொருத்தப் பட்டிக்கலாம் எனவும் அதனால் முன்கூட்டியே திட்டமிட்டு நடமாட்டம் அதிகமுள்ள வேளைகளில் இவற்றை வெடிக்கப்பண்ணியிருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது.

கைரேகை நிபுணர்களின் அறிக்கை இன்னமும் கிடைக்காத வந்து சேரவில்லை.

அவர்களின் பூர்வாங்க ஆய்வுகள் எயர்லங்கா, மத்திய தந்திக் கந்தோர், வெள்ளவத்தை பொலிஸ் நிலையம் ஆகியவற்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களை பெரிதும் தொடர்புபடுத்தவனவாகவே அமைந்து உள்ளன.

மக்கள் முகம்

### மல்லாகத்தில் ஐக்கிய நாணய சங்கம்

யாழ்ப்பாணம், மே 12

ஐக்கிய நாணய சங்கம் ஒன்று மல்லாகத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

நடப்பு வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவாகியுள்ளனர்.

தலைவர்: திரு.கு கந்தசாமி, உபதலைவர்: திரு. க. மு. சுப்பிரமணியம், செயலாளர்: திரு ஜே. பி. குணரத்தினம், பொருளாளர் திரு.செ. செல்வரத்தினம்.

இவர்களோடு ஐந்து பேர் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

### சமூக தொண்டர் நடராசா

மட்டக்களப்பு, மே 12

மட்டக்களப்பு நகர வர்த்தகரும் பிரபல சமூக சேவையாளருமான திரு. சண்முகம் நடராசா மட்டக்களப்பு சிறைச்சாலை



சமூக தொண்டராக சிறைச்சாலை திணைக்களத்தினால் நியமனம் பெற்றுள்ளார்.

சிறைச்சாலைத் திணைக்கள ஆயுள்கால தொண்டராக நியமனம் பெற்றுள்ள இவர் கல்லடி சுற்றுடலை உள்ளடக்கிய பகுதியில் கடமையாற்றுவார்.

இப்பகுதியிலிருந்து சிறை சென்ற, சிறைத் தண்டனை அனுபவித்து விடுதலையான கைதிகளினதும், குடும்பங்களினதும், தொழில் வாய்ப்பு சுயவருமானம் தொடர்பான செயல்களுக்கும் உறுதுணையாக இவர் செயற்பட்டு வருகிறார்.

### கோரிக்கை

உடுப்பிட்டி மே 12

கரவெட்டிப் பகுதி மாணவர்களின் வசதி கருதி பற்சிகிச்சை முகாம் ஒன்றை நடத்தும்படி கரவெட்டியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் பருத்தித்துறை சுகாதார வைத்திய அத்தியட்சகரைக் கேட்டுள்ளன.

### இரத்ததானம்

உடுப்பிட்டி, மே 12

பந்திகை ஆசிரியர் வைத்தியசாலை இரத்த வங்கிக்கு கரவெட்டி நாவலர் மடம் ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலைய யுவதிகளால் இரத்தம் வழங்கப்பட்டது.

இந்த இரத்தம் அவசர நோயாளர்களின் சத்திர சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும்.

### காரைதீவில் 75,000 கொள்ளை

கல்முனை ,மே 12

அக்கரைப்பற்று பண்டிப்போ ஊழியர்களுக்குக் கொண்டுவரப்பட்ட சம்பளப்பணம் காரைதீவில் வைத்து இனந்தெரியாத கோஷ்டியினால் கொள்ளை இடப்பட்டது.

இச்சம்பவம் கடந்த புதன் பகல் இடம்பெற்றது.

கொள்ளை இடப்பட்ட பணத்தின் பெறுமதி 75,000 ரூபா என்று அறிவிக்கப்பட்டது.

## பண்டிதமணி மரணம் தமிழ் உலகுக்கு பேரிழப்பு

### மைலாப்பூரில் நினைவு அஞ்சலி

சென்னை, மே 12

நாவலர் பெருமானின் மரபு வழியில் வளர்ந்து அவரைப் போலவே தம் வாழ்க்கையை சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதில் அர்ப்பணித்த பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் மரணம் தமிழ் உலகுக்குப் பேரிழப்பாகும்.

சென்னை மயிலாப்பூரில் சைவசித்தாந்த பெருமன்டபத்தில் நடைபெற்ற பண்டிதமணி கணபதிப்பிள்ளை நினைவாஞ்சலிக் கூட்டத்தில் சிறப்புரை ஆற்றிய சைவசித்தாந்தப் பெருமன்றத் தலைவர் பேராசிரியர் க. திருஞானசம்பந்தப்பிள்ளை இவ்வாறு குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலை அணியின் பொதுச் செயலாளர் திரு. ஈழவேந்தன் பேசுகையில் கூறியதாவது:—

தமிழகத்துத் தமிழறிஞர்களை ஈழத்துத் தமிழர்கள் அறிந்தளவு தமிழகத்தில் ஈழத்துப் புலவர்கள் பாராட்டுப் பெறவில்லை என்று ஒரு குறையுண்டு.

அக்குறையை நீக்கி நிறைவு பெறத் தமிழகத்தார் முயல வேண்டும்.

நிறைவாழ்வு வாழ்ந்த அன்னார் நிலையான புகழ் பூத்த அறிவுரைகளை, நூல்களை, கட்டுரைகளை நமக்கு தந்துள்ளார்.

தமிழக சான்றோர் தமது படைப்புக்களில் பண்டிதமணி ஐயா ஆற்றிய பணிக்கு உரிய சிறப்பை அளிக்க வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

"நாவலரின் சைவத் தமிழ் உணர்ச்சியைத் தன்னகத்தே கொண்ட பண்டிதமணி ஐயா இலக்கிய சர்ச்சை சமயப் பிரச்சினைகள் எழும் போது வழங்கும் தீர்ப்பை யாரும் ஏற்கொள்வதுண்டு.

அன்னார் சைவத் தமிழ் பாதுகாவலனாக விளங்கினார்"— என்று ஆறுமுக நாவலர் சபையின் முன்னாள் துணைச் செயலாளர் திரு ஐ.தி. சம்பந்தன் குறிப்பிட்டார்.

பண்டிதமணி ஐயாவுக்கும் தமிழக அறிஞர்களுக்கும் எப்போதும் நெருங்கிய உறவு நிகழ்ந்தது.

ஈழம் வந்த எந்தத் தமிழறிஞரும் திருநெல்வேலியில் உள்ள பண்டிதமணியின் குடிலைக் குச் சென்று தரிசனம் பெறுவது தமிழகம் திரும்புவதில்லை''— என பண்டிதர். கா. பொ. இரத்தினம் குறிப்பிட்டார்.

### கலையரங்கு நிர்மாணம்

மண்டைதீவு, மே 12

மண்டைதீவு மகா வித்தியாலயத்தின் வைர விழாவை முன்னிட்டு கலையரங்கு ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

இக் கலையரங்கு கட்டடத்துக்குரிய செலவினங்களை இப்பகுதியைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் ஒருவர் பொறுப்பேற்றுள்ளார்.

## மக்கள் தேவைகளை நிறைவேற்றும் கடமை சங்கங்களையே சாரும்

புங்குடுதீவு, மே. 12

கிராமங்களின் முன்னேற்றத்திற்கும் மக்களின் நலனுக்குமான பல்வேறு திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்துவதில் கிராம முன்னேற்றச் சங்கங்கள் தீவிர கவனம் செலுத்த வேண்டும். இன்றைய சூழ்நிலையில் மக்களின் தேவைகளை நிறைவேற்றும் கடமை கிராம முன்னேற்றச் சங்கங்களையே சார்ந்தது.

புங்குடுதீவு, கிழக்கு மத்தி விசேட சேவை அலுவலர் திரு. சோ. சச்சிதானந்தம் இவ்வாறு கூறினார்.

புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற புங்குடுதீவு கிழக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

சங்கத் தலைவர் ஆசிரியமணி சி. க. நாகலிங்கம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி என். நரசிம்மம் பேசுகையில் எல்லாவற்றுக்கும் அரசின் உதவியை எதிர்பார்ப்பதைவிட சுயமுயற்சியில் நம்பிக்கை வைத்து அபிவிருத்திப் பணிகளில் உறுப்பினர்கள் ஈடுபட வேண்டும் என்றார்.

திரு. செ. நித்தியானந்தன் பேசுகையில் அடுத்த வருடாந்தக் கூட்டத்திற்கு இடையில் சங்கத்திற்கென நிரந்தரக் கட்டடம் ஒன்று உருவாக்க நிர்வாகத்தினர் முயற்சிக்க வேண்டும் என்றார். பொதுமக்கள் இதற்குப் பூரண ஒத்துழைப்பு நல்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

திரு. க. பொன்னம்பலம், திரு த. சுந்தரமூர்த்தி ஆகியோரும் உரையாற்றினர்.



ஒன்றென்றிரு

நன்றென்றிரு

எந்த ஒரு முயற்சியிலும் மேம்பாடு பெறவேண்டுமாயின் அம்முயற்சியிலேயே முழுமையாக ஈடுபட்டு பக்திசிரத்தையுடன் பாடுபட்டு உழைத்தல் வேண்டும்.

எனவேதான்—

ரெலெக்ஸ், ரெலிபோன் சேவையையே எமது ஒரே ஒரு தனித்துவத் தொழிலாகக்கொண்டு இத் தொழிலுக்கே எம்மை முழுமையாக அர்ப்பணித்து இதய சுத்தியுடனும் பயபக்தியுடனும்

பக்குவமான, பரிபூரணமான மேம்பாடுமிக்க

ரெலெக்ஸ் ரெலிபோன் சேவையை

தமிழ் பேசும் பெருமக்களுக்கு பணிவன்புடன் வழங்கி வருகிறோம்

ரெலிகுளோப், ஆர். ஜி. கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்நகர்.

ரெலிபோன்: 25088-ஆறு சமாந்தர 'லைன்கள்' கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

உணவுப் பொருட்களை நாற்பது தினங்களுக்குப் பதுக்கி வைக்கின்றவர் அல்லாஹ்வை விட்டும் நீங்கி விடுகிறான்.

- நபி (ஸல்)


# உதயன்

இல, 15 சேவது ஒழுங்கை
மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்,

தொலைபேசி 24805 2807

12 05 86

த. பெ. 23


## யாழ்ப்பாணத்தில் ஒரு கலா நிலையம்

யாழ்ப்பாணத்தில் மத்திய கலா நிலையம் ஒன்றை நிறுவ முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இது மகிழ்ச்சிக்கு உரியதும் வரவேற்கப்பட வேண்டியதும் ஆகும்.

ஈழத்தமிழர் நகரங்களில் ஒன்றான யாழ்ப்பாணத்தில் மத்திய கலா நிலையம்—மண்டபம் ஒன்று இதுவரை இல்லாதிருந்தது பெரும் துரதிர்ஷ்டமே.

கொழும்பு தலைநகரில் ஒன்றல்ல, பல கலா நிலையங்களும், மண்டபங்களும், அரங்குகளும் உள்ளன. அதனால் அப்பகுதியில் உள்ள கலைஞர்கள் தங்கள் ஆற்றலை, ஆக்கத்திறனை மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டவும், அதன் மூலம் கலைகளை வளர்க்கவும் நிறைந்த வசதிகளும், வாய்ப்புகளும் உண்டு.

அவை மட்டுமன்றி இளங்கலைஞர்களைப் பயிற்றுவிக்கவும், அவர்களின் கலைத்திறனை வளர்க்கவும் ஆக்கமும் ஊக்கமும் அளிக்கவும் வாய்ப்பு இருக்கிறது.

கொழும்பைப் போலவே கண்டி மற்றும் பிரதான நகரங்களிலும் கலா நிலையங்கள் மண்டபங்கள் இருக்கின்றன. அதனால் சிங்கள மக்களின் கலைகள் அரசாங்க ஆதரவுடன் "ஓகோ" என்று வளர்ந்து வருகின்றன. பழைய கலைகளை பேணுவதுடன், புதிய கலைகளிலும் சிங்களத்தினர் முன்னேறி வருகிறார்கள். இரவில் ரூபவாஹினியைப் பார்த்தால் அது எவருக்கும் புலனாகும்.

தலைநகரில் மட்டுமல்ல ஏனைய தென்னிலங்கை நகரங்களிலும் நடைபெறும் சித்திரக் கண்காட்சிகள், நாடகங்கள், நாட்டிய நாடகங்கள், புகைப்படக் கண்காட்சிகள் மற்றும் இன்னோரன்ன கலைகள் நாளாந்தம் ரூபவாஹினி நிகழ்ச்சிநிரலை நிரப்புகின்றன. அவை யாவும் சிங்கள மக்களின் கலை அபிவிருத்தியின் சாட்சிகள். கலாசார வளர்ச்சியின் அத்தாட்சிகள்.

ஆனால் தமிழ் மக்களின் கலை கலாசாரங்கள் குற்றுயிர் நிலையில் இருக்கின்றன. அவற்றை வளர்க்க அரசாங்க ஆதரவும் இல்லை. மக்களது செயலூக்கமும் இல்லை.

அதனால் எமது அருமந்த கலைகள் பலவும் மறக்கப்பட்டனவாய், மறைக்கப்பட்டனவாய், ஒதுக்கப்பட்டனவாய் போய் விட்டன.

தமிழ்ப் பகுதிகளில் போர் நிலைமையைத் தோற்றுவித்து தமிழர்களின் சமய, கலை, கலாசாரங்களை அரசாங்கத்தினரும் அவர்களின் ஏவலாளிகளும் அழிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்கள். அவர்கள் ஆலயங்களையும் அறிவாலயங்களையும் கூடத் தீயிட்டுக் கொளுத்தும் அளவிற்கு தமது அராஜகத்தை வெகு கச்சிதமாகத் திட்டமிட்டுச் செய்து வருகிறார்கள்.

வீட்டில் இருப்பதே உயிராபத்தானது என்ற இக்கட்டான நிலையில் தமிழ்ப்பகுதிகளில் கலை எழுச்சியையும், வளர்ச்சியையும் எப்படி எதிர்பார்ப்பது? கிராம, குறிச்சி குடும்ப மட்டத்தில் தானும் கலையைப் பேணவோ, வளர்க்கவோ முடியாத நிலை உருவாகி இருக்கிறது.

ஒரு நாட்டின் — மக்களின் — இனத்தின் வரலாறும் நாகரிகமும் அந்த இனத்தின் கலை, கலாசார வளர்ச்சியோடும், மறுமலர்ச்சியோடும் பின்னிப் பிணைந்தவை.

ஆகையால் அரசாங்கத்தினர் அழிக்கிறார்கள், புறக்கணிக்கிறார்கள், ஆதரிக்கிறார்கள் இல்லை என்பதற்காக நாம் வாளாதிருக்கக் கூடாது.

இந்த வகையில் யாழ்ப்பாணத்தில் கலாசார ஆலோசனைக்குழு ஒன்றை நிறுவி கலாபிவிருத்திக்கு உழைக்கவும், உதவவும் முன்முயற்சி எடுத்து வரும் யாழ் அரசாங்க அதிபர் திரு. எவ. மு. பஞ்சலிங்கத்தை தமிழ்க் கலைஞர்கள் சார்பில் நாம் பாராட்டுகிறோம்.

இந்த இக்கட்டான நேரத்தில் இதனைச் செய்ய முடியுமா? உயிரே போகும் நிலையில் கலை விருத்தியை நினைக்க முடியுமா என்ற அச்சத்தின் நிமித்தம் எழும் கருத்தையும் சட்டை செய்யாமல் அவர் செயலில் இறங்கி இருக்கிறார்.

மறைமுகமாகத் தமிழர் கலை, கலாசாரங்களை அழிக்க முற்படும் அரசு, வெளியுலகிற்குக் காட்டிக்கொள்ளும் பொருட்டு — அதாவது தமிழ்க் கலாசார வளர்ச்சிக்கும் தாம் உதவி செய்வதாக ஒப்பனைப்படுத்த - சொற்ப நிதியை ஒதுக்கி வருகிறது.

அதனை விரயமாக்காமல், செலவழியாப் பணமாகத் திரும்பவும் அரசுக்கே செல விடாது கலை விருத்திக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று அரச அதிபர் எண்ணுகிறார்.

அந்த எண்ணத்தின் விளைவு தான் கலாசார நிலையம் எனலாம். எப்போதோ செய்திருக்க வேண்டிய பணி (அவ்வாறு செய்திருந்தால் சில வேளை ஷெல் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கலாம். அல்லது தீக்கிரையாகி இருக்கலாம். அது வேறு விடயம்) இப்போதாவது செய்வதற்கு முயற்சி எடுக்கப்படுவது வரவேற்கக்கூடியது.

கலாசார நிலையம் — கட்டடம் அமைக்கும் திட்டம் செயலுருப் பெற வேண்டும். தமிழ் இயல், இசை, நாடக, நடன, நுண் கலை, சமய கலாசாரங்களைப் பேணவும், வளர்க்கவும் வசதிகள் கொண்டதாகக் கலா நிலையம் அமைய வேண்டும். மாவட்டத்தின் கலைஞர்கள் அதனை தக்கவாறு பயன்படுத்தக் கூடியதாக அது அமைய வேண்டும். நகரின் மத்தியான, வசதியான இடத்தில் அமைய வேண்டும். இவற்றைப் பொறுத்தே திட்டத்தின் வெற்றியும் பயன்பாடும் அமையும் என வலியுறுத்த விரும்புகிறோம்.

# பலஸ்தீனருக்கு ஒரு தனி நாடு

## ராஜீவ் காந்தி வலியுறுத்துகிறார்

புதுடில்லி, மே 11

பலஸ்தீனர்களுக்கு ஒரு தனி நாடு வேண்டும். இதற்கு உதவ சகல நாடுகளும் முன்வரவேண்டும்.

இவ்வாறு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அறைகூவல் விடுத்தார்.

அரபு பத்திரிகையான அல் அஹ்ராமுக்கு அவர் பேட்டி அளித்தார். பேட்டியிலேயே இதனை வலியுறுத்தினார் ஒரு சுதந்திரமான தன்னுரிமையுள்ள நாடாக பலஸ்தீனம் விரைவிலே மலரவேண்டும் தவறினால் மேற்காசிய பிரச்சினை மேலும் சிக்கலாகும் என்று திரு.ராஜீவ்காந்தி வளைகுடா யுத்தம் பற்றி இவர் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த ஐந்தரை வருட காலமாக நடைபெற்று வரும் வளைகுடா யுத்தத்தை நேரடியான ஒரு முடிவுக்குக் கொண்டு வருவது முடியாத காரியம் என்றார்.

ஐக்கிய நாடுகள் சபையும் அணிசேரா நாடுகள் இயக்கமும் இதற்காக எடுத்த சகல முயற்சிகளும் தோல்வியையே தழுவியுள்ளன என்றும் அவர் சொன்னார்.

## அமெரிக்க ரொக்கட்டை காணவில்லை

புதுடில்லி, மே 11

சூழல் அசுத்தமடைவது தொடர்பான தகவல்களை அறியும் கருவிகளை எடுத்துச் சென்ற அமெரிக்க ரொக்கட் ஒன்று விண்ணில் ஏவப்பட்ட பின்னர் காணாமல் போனது.

கடந்த மாதம் 25ம் திகதி இந்த ரொக்கட் காணாமல் போன போதும் அது பற்றிய செய்திகள் இப்போதுதான் வெளியே வரத் தொடங்கியிருக்கிறது.

இந்த வருடத்தில் அமெரிக்காவுக்கு கிடைத்த நான்காவது வான்வெளி இழப்பு இதுவாகும்.

அன்றூ-சாரா

## காதல் திருமணம் ஜூலையில் பிரிட்டிஷ் அரசமாளிகை அறிவிப்பு

லண்டன், மே 11

பிரிட்டிஷ் அரசி எலிஸபெத்தின் இரண்டாவது மகன் அன்றூ தமது காதலியான சாரா பேர்குசனை ஜூலை மாதம் 23ஆம் திகதி திருமணம் புரிவார் என அரசமாளிகை அறிவித்துள்ளது.

கல்யாணத்தினம் வரை இவர்களது திருமண ஆடை அலங்காரங்களோ தேன் நிலவுக்குப் போகும் இடமோ ரகசியமாக வைத்திருக்கப்படும்.

அரச குடும்பங்களின் வழமையான திருமணங்களைப் போன்ற மிகவும் ஆடம்பரமாக இத்திருமணம் இடம்பெறும்.

சுமார் ஒரு மைல் தூரமான பாதையில் இத்தம்பதியின் திறந்த குதிரை வண்டி ஊர்வலம் நடைபெறவுள்ளது.

பொது மக்களும் பத்திரிகையாளர்களும் ஊர்வலத்தைப் பார்ப்பதற்கேற்ற வசதிகளும் தற்பொழுதிலிருந்தே செய்ய ஆரம்பிக்கப்பட்டு விட்டன.

அரசமாளிகைக்குள் செல்ல விரும்பும் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களுக்கான அனுமதியையும் காலம் தாழ்த்தாமல் பெற்றுக் கொள்ளும்படியும் அரசமாளிகை கோரியுள்ளது.

வெளிநாட்டு ஜனாதிபதிகள், பிரதமர்கள், பிரமுகர்கள் பெரும் அளவில் கலந்து கொள்வர் என்பதால் பாதுகாப்பு நடவடிக்கைகளும் பலப்படுத்தப்படவுள்ளன.

## இத்தாலிய அரசை நிர்ப்பந்திக்கும் மகஜர்

மிருக வேட்டையைத் தடை செய்வதற்காக சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தும்படி இத்தாலிய அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டு வருகிறது.

இத்தாலிய அரசுக்குச் சமர்ப்பிப்பதற்கான மகஜர் ஒன்றை வனவிலங்குகள் பற்றிய ஆராய்ச்சியாளர்கள் தயாரித்து வருகின்றனர்.

இதுவரை 1 லட்சம் பேர் மகஜரில் கையெழுத்திட்டுள்ளனர்.

மகஜரில் 5 லட்சம் பேர் கையெழுத்திட்டால், இத்தாலி அரசாங்கம் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தியே ஆகவேண்டும்.

**டயானாவிற்கு கவர்ச்சியான பாதுகாப்பு**

டோக்கியோ, மே 11

ஜப்பானுக்கு ஆறு நாள் நட்புறவு விஜயம் மேற்கொண்டுள்ள டயானாவின் மெய்ப்பாதுகாவலராக ஜப்பான் பொலிஸ் பகுதியிலுள்ள ஆணழகன் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உலகிலேயே மிகவும் அழகானவரும் நாகரீகமணியாகவும் இருக்கும் டயானாவிற்கு ஜப்பான் பொலிஸ் தரும் கௌரவம் சிறந்த பாதுகாப்பை அளிப்பது மட்டுமல்ல கவர்ச்சிகரமான ஒருவரை அவரின் மெய்ப்பாதுகாவலராக நியமிப்பதும் தான் என பொலிஸ் சிரேஷ்ட அதிகாரி கருத்து வெளியிட்டார்.

**வெளி உலகில்**

## இலங்கையின் யோசனைகளை வெளியிட இது ஏற்ற சமயம் அல்ல

லோக சபையில் சபாநாயகர்

புதுடில்லி, மே.11

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இலங்கை தெரிவித்த யோசனைகளை வெளியிடுவதற்கு இது தக்க சமயம் அல்ல.

அண்ணா தி. மு. க. தி. மு. க எம். பிக்கள் விடுத்த கோரிக்கைக்கு பதில் அளிக்கையில் லோகசபை சபாநாயகர் மேற்கண்டவாறு கூறினார்:-

இலங்கைப் பிரச்சினை சம்பந்தமாக நடந்த பேச்சுக்கள் பற்றி அரசு சபையில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று அண்ணா தி. மு. க. எம். பி திரு. குழந்தைவேலுவும் தி. மு. க. எம். பி திரு. சோமுவும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அந்தப் பிரச்சினை பற்றி விவாதிப்பது குறித்து உரிய நேரத்தில் பரிசீலிக்கப்படும் என்றும் சபாநாயகர் கூறினார்.

## பங்களா தேஷில் தேர்தல் முடிவுகள் இடைவெளிக்குப் பின்

புதுடில்லி, மே 10

48 மணி நேர இடைவெளிக்குப் பின்னர் பங்களாதேஷ் பொதுத் தேர்தல் முடிவுகளை பங்களாதேஷ் வானொலியும், தொலைக்காட்சியும் சனி மாலை மீண்டும் அறிவிக்கத் தொடங்கியுள்ளன.

எனினும் தேர்தல் முடிவுகள் தொடர்பான இழுபறி நிலை இன்னும் தொடர்ந்து நீடித்து வருகிறது.

இதுவரை அறிவிக்கப்பட்ட 206 தொகுதி முடிவுகளில் 93 தொகுதிகளில் அரச சார்பு ஜாதியா கட்சி வெற்றி பெற்றிருக்கிறது.

பிரதான எதிர்க்கட்சியான அவாமி லீக் 56 தொகுதிகளிலும் ஜமாய்த் இஸ்லாமி 10 தொகுதிகளிலும், கம்யூனிஸ்ட் கட்சி 5 தொகுதிகளிலும் வெற்றி பெற்றிருக்கின்றன.

22 தொகுதிகளில் சுயேச்சையாளர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

## தமிழ்நாடு மேலவை கலைக்கப்படும்

சென்னை, மே 11

தமிழ்நாடு சட்ட மேலவையை கலைப்பது பற்றிய அரசின் இறுதிக் கொள்கையை இன்னும் ஓரிரு நாட்களில் அறிவிக்கப்படும் என்று மேலவையின் நிதியமைச்சர் திரு. நெடுஞ்செழியன் அறிவித்தார்.

நாளை திங்கட்கிழமை தமிழ்நாடு சட்டப் பேரவையில் இது சம்பந்தமான கொள்கைக் குறிப்பு பற்றிய அறிவிப்பை அரசு வெளியிடக்கூடும் என்றும் அவர் கூறினார்.

சட்ட மேலவையைக் கலைக்கும் திட்டம் அரசுக்கு இருக்கிறதென்று அவர் மேலும் தெரிவித்தார்.

## தேவார திருவாசக மனனப் போட்டி

யாழ்ப்பாணம், மே 12

தேவார திருவாசக மனனப் போட்டிகள் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இப்போட்டிகள் இம்மாதம் 17 ஆம் 18 ஆம் திகதிகளில் காலை 9மணி அளவில் ஆதீன மண்டபத்தில் நடைபெறும்.

யாழ் மாநகர எல்லைக்குட்பட்டோருக்கு 17 ஆம் திகதியும் மற்றையோருக்கு 18 ஆம் திகதியும் போட்டிகள் நடைபெறும்.

ஆதீனத்தில் நடைபெற இருக்கும் தெய்விக மாநாட்டின் இறுதி நாளான 22 ஆம் திகதி காலை பரிசில்கள் வழங்கப்படும்.

### சமய சந்நிதிகளில்

**யாழ் நாச்சிமார் ராஜகோபுர கும்பாபிஷேகம்**

யாழ்ப்பாணம், மே 12

நாச்சிமார் கோவில் என அழைக்கப்படும் யாழ். வண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீ நாமாட்சி அம்மாள் ஆலய ராஜ கோபுர மகா கும்பாபிஷேகம் இன்று காலை நடைபெறவுள்ளது.

**நயினை உற்சவம்**

யாழ்ப்பாணம், மே 11

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் வருடாந்த மஹோற்சவம் ஜூன் மாதம் ஏழாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பித்து ஜூன் மாதம் 22 ஆம் திகதி தெப்போற்சவத்துடன் பூர்த்தியாகவுள்ளது.

## பொருளாதார அபிவிருத்தி அவசியம்

### மக்கள் சபை கூட்டத்தில் உரை

பருத்தித்துறை, மே 12

இன்றைய காலகட்டத்தில் முக்கியமாக தமிழ் பேசும் மக்களிடையே பொருளாதார விருத்தியை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும்.

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான மக்கள் அவை அங்குரார்ப்பணக் கூட்டத்தில் உரையாற்றிய மக்கள் அவை அமைப்பாளர் திரு ச. செற்றூர் ராசா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:

கிராம மக்களிடையே யுள்ள படித்த இளைஞர்கள் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்த கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

குறிப்பாக கிராமிய மக்களுக்கு சுய பொருளாதார விருத்தி ஏற்றது.

தேரரின் வடமாகாண அனுபவங்கள்:

# நாகவிகாரை தாக்கப்பட்ட சம்பவத்தின் பின்னணி என்ன?

காங்கேசன்துறை திஸ்ஸ விகாரையின் விகாராதிபதியாக இருந்தவர் வண தெல்கெல்ல பதும சிறி தேரர்.

'யாழ்ப்பாணத்தில் என் அனுபவங்கள்' — என்ற தலைப்பில் அவர் சிங்களத்தில் எழுதிய புத்தகத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பு யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் 'சற்றடே ரிவியூ' ஆங்கில வார இதழில் பிரசுரமானது.

அதன் தமிழ் மொழி பெயர்ப்பின் 7ஆவது பகுதி இன்று பிரசுரமாகிறது.

நாகவிகாரையை வட பகுதியில் உள்ள இளைஞர் குழுக்கள் தாக்கியதாக சிங்களவர் மத்தியில் வதந்தி ஒன்று பரப்பப்பட்டது.

இதன் உண்மை எனக்குத் தெரியும். நாகவிகாரைக்கு அருகில் கத்தோலிக்க தேவாலயம் ஒன்று உண்டு.

அதன் அருகில் இருந்த பெற்ற நிலக்கண்ணி வெடித்தாக்குதலில் இராணுவ வாகனம் சேதமானதுடன் சிப்பாய்களும் காயம் அடைந்தனர்.

தேவாலயத்தில் உள்ளவர்கள் தான் கண்ணிவெடிகளைப் புதைக்க உதவினர் என்ற சந்தேகத்தில் இராணுவத்தினர் தேவாலயத்தை நோக்கிச் சுட்டனர். தேவாலயம் சேதமடைந்தது.

கோபமடைந்த கத்தோலிக்கரில் ஒரு பகுதியினர் நாகவிகாரையைத் தாக்கினர்.

1976 இல் சிங்களவர்கள் மத்தியில் பரப்பப்பட்ட இன்னொரு பொய்யான கதையை இது நினைவுக்குக் கொண்டு வருகிறது.

வட்டுக்கோட்டை பல்கலைக் கழக வளாகத்தில் மாரசிங்க என்ற சிங்கள இளைஞர் படித்து வந்தார். அவர் ஒரு நாள் கத்திக் குத்தினால் படுகாயமடைந்தார்.

உண்மை எனக்குத் தெரிந்து இருந்தது. அதை இங்கு கூறுகின்றேன்.

மாரசிங்காவும் ஒரு பெண்ணும் இன்னும் சில மாணவர்களும் யாழ்ப்பாணத்தில் இருந்து வட்டுக்கோட்டைபோக பஸ்ஸில் பயணம் செய்தனர்.

பஸ்ஸில் இரண்டு தமிழர் பதிவுசெய்த ஆசனங்களில் மாரசிங்காவும் அப்பெண்ணும் அமர்ந்து கொண்டனர்.

ஆசனம் பதிவுசெய்த இருவர் தமிழரும் வட்டுக்கோட்டை வாசிகள். ஆசனம் பதிவுசெய்தவர்கள் பஸ்ஸினுள் ஏறியதும் அவர்களுக்கும் மாரசிங்காவுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

வட்டுக்கோட்டையை அடையும்வரை வாக்குவாதம் நீடித்தது. அதைத் தொடர்ந்து தான் கத்திக்குத்து இடம்பெற்றது. இது ஒரு சிங்கள எதிர்ப்புச் சம்பவம் அல்ல எப்படியோ இச் சம்பவம் வகுப்புவாதப் பிரச்சினையாக்கப்பட்டு விட்டது.

அப்பாவிகளை ஆயுதப் படையினர் தன்புறுத்தினர். அப்படி நடந்து கொண்ட படையினரின் ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு இலக்கான வடபகுதிக்கு இடமாற்றம் பெற்று வந்த சிப்பாய்களும் இருந்தனர்.

தமிழரைத் தன்புறுத்தினால் மீண்டும் சொந்த இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுவோம் என்ற எண்ணத்தில் தான் அவர்கள் தமிழரைத் தன்புறுத்தி இருக்க முடியும்.

அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அப்பாவிகளை பாதுகாக்க நான் முன் வந்தேன்.

ஒரு நாள் விகாரையினுள் ஆயுதப்படையினர், கூடிய அளவில் நிறைந்து இருந்தனர். ஒரு தந்தையும் தாயும் கும்பிட்டபடி உதவுவோ என்று அழுதபடி விகாரைக்குள் வந்தனர். என் காலடியில் நெடுஞ்சாணாக விழுந்து காலை முத்தமிட்டனர்.

"எங்கள் மகனை காப்பாற்றுங்கள். ஆயுதப் படையினர் மகனை அழைத்துச் சென்று விட்டார்கள்" — இப்படி அவர்கள் முறையிட்டனர்.

1984 ஏப்ரல் 18 என்று நான் நம்புகிறேன். அபாயகரமான காலம் அது. சில தினங்களுக்கு முன்னர் தான் நாகவிகாரையும் வேறு சில ஆலயங்களும் உடைக்கப்பட்டன.

அப்படியிருந்தும் நல்ல காரியத்துக்காக உயிரைத் தியாகம் செய்வது என்று எண்ணினேன். பலர் எதிர்த்தபோதும் நான் விகாரையை விட்டுப் புறப்பட்டேன்.

(வளரும்)



**பொய்யாமொழி**

குறள்:

நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பின்
பிறற்குரியாள் தோள்தோயா தார்.

பொருள்:

கடல் சூழ்ந்த உலகத்தில் நன்மைக்கு உரியவர் யார் என்றால் பிறனுக்கு உரிமை உடையவளின் தோளைப் பொருந்தாதவரே ஆவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

